20th January 1961]

(உ) எத்தனை ஆசிரியர்கள் 1960-ல் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்?

(எ) இத்திட்டத்திற்காக தேவையான தொகை எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(இ) Elementary including Basic Schools, Secondary Schools including Post-Basic Schools, Anglo-Indian Schools and Training and other special schools.

(உ) It is not possible to give this information definitely. The annual percentage of retirement of teachers is estimated to be about 3.

(எ) The current year's budget provision is Rs. 4 lakhs.

SRI V. SANKARAN : *பென்ஷன் திட்டமானது, பள்ளிக்கூடங்களிலுள்ள நான்-டீச்சிங் ஸ்டாப்-க்கு விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறதா? அப்படியானால் எப்போது விஸ்தரிக்கப்படும். ஏன் விஸ்தரிக்கப்படவில்லை?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *ஆசிரியர்களுக்கு என்று ஏற்பட்ட திட்டம்; வேறு தனிப்பட்ட துறையில் உள்ளவர்களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு உத்தேசம் இல்லை.*

Excise tax

* 29 Q.—SRI A. P. C. VEERABAHU (on behalf of SRI K. R. NALLASIVAM and SRI M. P. SARATHI) : *கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

(அ) ராஜ்ய சர்க்கார் விதிக்கும் விற்பனை வரிக்குப் பதில் மத்திய சர்க்கார் கலால் வரி விதிப்பதுபற்றி ராஜ்ய சர்க்காரின் யோசனை கோரினரா?

(இ) ராஜ்ய சர்க்கார் கூறிய யோசனை யாது?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) As the correspondence between this Government and the Government of India on the question of replacement of sales tax on certain commodities by the levy of additional excise duties is treated as confidential, I regret that I am not in a position to reveal the recommendations of this Government to the Government of India in the matter.

SRI S. M. ANNAMALAI : *இந்த சர்க்காருக்கு விற்பனை வரி திட்டம் மூலம் அதிகமான வருமானம் கிடைக்கிறது. இதைக்கூட மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்டால் இந்த சர்க்காருக்கு வேறு விதமான வருமானமே கிடையாது. ஆகவே, விற்பனை வரி எந்த இடத்திற்கும் செல்லாமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்*

[20th January 1961

கைகள் எடுத்து மத்திய சர்க்காருக்கு தெரிவிப்பார்களா ? இந்த விற்பனை வரி மேல் கை வைக்கக்கூடாது என்று சொல்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்கள், இந்த விற்பனை வரியைக் கூட மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது என்று சொன்னார்கள். ஒருவரும் எடுத்துக் கொள்ள வில்லை. அதற்குப் பதிலாக அடிஷனல் எக்ஸைஸ் டியூட்டி போடலாமா என்று யோசனை. அப்படி கொடுப்பதில் நன்மை யிருக்கிறது என்ற ஒரு அபிப்பிராயமும் இருக்கிறது.

Sri J. MATHA GOWDER : விற்பனை வரியை கலால் வரியோடு சேர்ப்பதற்கு தாமதம் ஏற்பட்டாலும், தேயிலை போன்ற பொருள் களுக்கு இரு வரி இருப்பதால், அதனால் சிரமம் இருப்பதால், தேயிலைக்குள்ள விற்பனை வரியை கலால் வரியோடு சேர்ப்பதற்கு அரசாங்கம் கூடிய விரைவில் நடவடிக்கைகள் எடுக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த யோசனையும் அங்கு ஆலோசிக்கப்பட்டது.

Sri A. GOVINDASAMY : விற்பனை வரிக்குப் பதிலாகத்தான் கலால் வரி போட உத்தேசித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் நம் ராஜ்ய சர்க்காருக்கு வருமானம் குறையாதா ? அதைத் தடுக்க நம் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : துணி, சர்க்கரை, புகையிலை இம்மூன்று பண்டங்களுக்கு விற்பனை வரிக்குப் பதிலாக எக்ஸைஸ் வரி விதிக்க ஒத்துக்கொண்டோம். அதனால் நமக்கு முன்பு வந்த வருமானத்தைவிட இப்போழுது அதிகம் வந்து கொண்டிருக்கிறது.

Display of prices of articles in shops

* 30 *Q.*—Sri A. A. RASHEED :
Sri A. VEDARATHNAM : } Will the Hon. the Minister for Home be pleased to state whether the Union Government have asked the opinion of the Government regarding the proposed legislation for the compulsory display of prices of articles in shops?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Sri A. A. RASHEED : May I know whether there is a proposal before this Government for the compulsory display of prices in the shops? If so, when do they propose to bring such a legislation?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no such proposal with this Government.